# ஒரு படம் 3 அர்த்தம்!



'வாழ்க்கையே தெரியாத வாலிப பருவத்துல, ஜாதி வெறி கண்ணுக்குள்ள நின்னு கபடி ஆடுனா, அவன் வாழ்க்கை எப்படியிருக்கும்? தெரிஞ்சோ தெரியாமலோ சில கிராமங்கள்ல நின்னும் குத்தவச்சுகும்மியடிச்சுக்கிட்டிருக்கு ஜாதி வெறி. ஏன் இப்படி? இதுக்கு என்ன காரணம்னு யோசிச்சப்பதான் 'வர்ணம்' உருவாச்சு'' என்கிறார் இயக்குனர் ராஜூ.

சந்தோஷ் சிவன் இயக்கிய 'ஆனந்த பத்ரம்', மோகன்லால் நடித்த 'சோட்டா மும்பை' ஆகிய மலையாள படங்களை தயாரித்தவர் இவர்.

''ஆமா, என் அண்ணன் அஜய் சந்திரனோடு சேர்ந்துதான் இந்தப்படங்களை தயாரிச்சேன். சின்ன வயசிலேயே சினிமான்னா காதல். மதுரையில வளர்ந்தேன். பிட்ஸ் பிலானியில இன்ஜினீயரிங் படிப்பை முடிச்சுட்டு அமெரிக்கா போயிட்டேன். ஒரு இடத்தைவிட்டு இன்னொரு இடத்துக்கு போகும்போதுதான் அந்த இடத்தோட அருமையும் பெருமையும் தெரியும்னு சொல்ற மாதிரி, அமெரிக்கா போன பிறகுதான், 'உன் சினிமா கனவு என்னாச்சு'ன்னு உள் மனசு கேட்டுட்டே இருந்துச்சு. ஊரும் சினிமாவும் திரும்பத் திரும்ப உள்ளுக்குள்ள வந்து அப்பிக்கொள்ள, வந்துட்டேன் சென்னைக்கு. 'வர்ணம்' படம் மூலமா இப்ப இயக்குனராக வெளிவர போறேன்'' என்கிற ராஜூ, சாஃப்ட்வேர் நிறுவனம் ஒன்றை நடத்துகிறார்.

'வர்ணம்னா மூன்று அர்த்தம் சொல்லுது. ஒண்ணு, கலர். இன்னொண்ணு வர்ணாஸ்ரம பிரிவு. அப்புறம் வரைபவன். இந்த மூணுமே கதையில இருக்கு. படத்துக்கு ஹீரோ தேடிக்கிட்டிருந்தப்போ, சின்னாளப்பட்டியை சேர்ந்த வாலிபால் ப்ளேயர் ஹரி கிடைச்சார். இவரும், 'கல்லூரி' அகில், 'அங்காடிதெரு' மகேஷ் எல்லாரும் நண்பர்கள். புதுமுகம் அஸ்வதா சென்னை பொண்ணு. மோனிகா மச்சரா வர்றாங்க. ஹீரோவோட மாமாவா சம்பத். ஜாதி சண்டையால அப்பாவை இழந்த 16 வயது பையன், பழி வாங்கணும்னு நினைக்கிறான். பயந்து போன அம்மா, அவனை மாமா ஊருக்கு அனுப்புறாங்க. அங்க அவன் சந்திக்கிற பிரச்னைகளால அவன் எப்படி மாறுறான்ங்கறதுதான் கதை.

நம்மை சுற்றி நாட்டை சுற்றி எவ்வளவோ விஷயங்கள் நடக்குது. நல்ல கவனிப்பாளராக இருக்கிறோம். ஆனா, அதுக்கப்புறம்? எதுவும் இல்லை. நான் கவனிக்கிற விஷயங்களை மக்களுக்கு சொல்லணுங்கறதுதான் என் நோக்கம். அதுக்காக, நல்ல படங்களை மட்டுமே எடுக்கணும்னு இருக்கிறேன். இந்தப் படத்துக்கு பிறகு தொடர்ந்து படம் இயக்குவேன். நல்ல படங்களை மட்டும்!'' என்கிறார் ராஜூ.

- மெண்டோ



ராஜூ

பிட்ஸ்:
தேவராஜ்